# மாணவர்களுக்குப் போதைப் பாக்கு விற்ற இளைஞர் 7 கிலோ பாக்குடன் சிக்கினார்

யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்குப் போதைப் பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் இளைஞர் ஒருவர் மாணவர்களுக்கு மாவா போதைப் பாக்கு விற்பனை செய்கின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இளைஞரைக் கைது செய்தனர்.

அந்த இளைஞரைச் சோதனையிட்டபோது, அவரது உடமையில் இருந்து சுமார் 7 கிலோ மாவா பாக்கைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (அ)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 08 வெள்ளிக்கிழமை 29.12.2023 கதிர் 147

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## விபத்தை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சரின் வாகனம் மீது தாக்குதல்

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் வாகனம், தங்கொட்டுவ பகுதியில் வைத்து தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பயணித்த சொகுசு ஜீப் வாகனம், மற்றுமொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து, அந்தக் காரில் பயணித்தவர்கள் அமைச்சரின் வாகனத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2➤

## கம்பஹா மாவட்டத்தில் கொவிட் தொற்றால் பெண் ஒருவர் மரணம்

கடந்த 25 ஆம் திகதி வாந்தி ஏற்பட்டமையின் காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்களில் ஒருவர் சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்த பெண்ணுக்கு அன்டிஜென்ட் பரிசோதனையின் பின்னர் கொரோனா தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யக்கல பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய திருமணமான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வைத்தியசாலையில்

2➤

## யாழ் மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் கஜேந்திரன் எம்.பி.க்குக் கண்டனம்




நாடாளுமன்றத்தில் நீங்கள் என்ன வார்த்தைகளை பயன்படுத்துகிறீர்கள் என்பது எமக்கு தெரியும். ஆனால், பொது அமைப்புகளும் பங்கேற்கும் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் கண்ணியமான வார்த்தைகளை பயன்படுத்துங்கள், என யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர் செல்லத்துரை நற்குணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், காடையர்கள் என கடற்றொழிலாளர் சமூகத்தை இழிவுபடுத்தி பேசியதாக செய்திகள் வெளிவந்திருந்தமை குறித்தும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டு கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. (O1)

## தொற்று நோய்கள் பற்றிய பயம் மக்களுக்கு வேண்டாம்! கொரோனா குறித்தும் அவதானம் செலுத்தப்படுகிறது

### சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க அறிவுரை



கொரோனா உள்ளிட்ட தொற்று நோய்கள் தொடர்பாக மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களாக கொரோனா உள்ளிட்ட தொற்று நோய்கள் மற்றும் பல்வேறு சுவாச நோய்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இதனால், நாட்டின் பிரதான வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் வருகைதரும் நோயாளர்களின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், முகக்கவசம் அணிவதன் மூலமும், முன்னதாக அறிவிக்கப்பட்ட சுகாதார பழக்கவழக்கங்களை மீண்டும் கடைப்பிடிப்பதன் மூலமும் நோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2➤

## இலங்கைத் தமிழருக்காக திரையுலகை அணிதிரட்டிய வீரத் தமிழன் விஜயகாந்த்!

### மனோ கணேசன் எம்.பி. இரங்கல்



இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் எம்மை நேசித்த, எமக்காகத் தமிழ்த் திரையுலகை அணி திரட்டிய, மதுரை மண்ணுக்கே உ ரிய வீரத் தமிழனாக எமக்காகக் குரல் எழுப்பிய தாய்த் தமிழகத் தொப்புள் கொடியான் என உணரப்பட்டவர் விஜயகாந்த் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் தே.தி.மு.க. தலைவரும் பிரபல நடிகருமான விஜயகாந்த் மறைவு தொடர்பில் மனோ எம்.பி. வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2➤

## கில்மிஷாவை நேரில் சென்று வாழ்த்திக் கௌரவித்த சிறீதரன்



ஈழத்தின் இசைக்குயில் என்று பெயர்பெற்றுள்ள கில்மிஷாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்று நேரில் சென்று வாழ்த்திக் கௌரவித்தார்.

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை இரவு 9 மணிக்கு முன்கூட்டியே மூடவேண்டிய நிலை தோன்றியுள்ளது

## நாட்டில் நிலவும் பொருளாதார நிலையே காரணமாம்

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்பு போதுமானதாக இருந்தாலும், எரிபொருள் விற்பனை குறைந்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனை குறைந்ததாலும், மின் கட்டணம் அதிகரிப்பதாலும், அநேகமான எரிபொருள் நிலையங்கள் இரவு 9 அல்லது 10 மணியளவில் மூடப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய வருடங்களில் பண்டிகைக் காலங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அதிகாலை 1 அல்லது 2 மணி வரை திறந்திருக்கும் எனவும், ஆனால் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் ஊழியர்களின் சம்பளம் போன்ற நடவடிக்கைகளுக்கு அதிக



சம்பளத்தை செலுத்தத் தவறியதன் காரணமாகவே இவ்வாறான நிலை தோன்றியிருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெதி-36)

## விஜயகாந்தின் பூதவுடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்திய கிழக்கு மாகாண ஆளுநர்



தே.மு.தி.க. தலைவர் கப்டன் விஜயகாந்த்தின் பூதவுடலுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

கப்டனுடன் பழகிய நாள்களை கிழக்கு ஆளுநர் நினைவுகூர்ந்ததுடன், விஜயகாந்தின் இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி இரங்கலும் தெரிவித்தார். (அ)

## கடற்படையின் உயிர்க்காப்பு பிரிவினர் மாணவர்களுக்கு உயிர்காப்பு பயிற்சி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மைக்காலமாக நீரில் மூழ்கி மரணிப்போரில் அதிகமானவர்கள் பாடசாலை மாணவர்களும் இளைஞர்களுமாகவே இருக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு திருகோணமலை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சமன் சிகேராவின் ஆலோசனைக்கமைய, திருகோணமலை பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.ஜீ.டபிள்யூ.லக்மால் தலைமையிலான பொலிஸ் தற்காப்பு படை வீரர்களினால் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இதுவரை திருகோணமலை பிராந்தியத்தில் மூவின பாடசாலைகளையும் சேர்ந்த 2000 மாணவ, மாணவிகளுக்கு உயிர்க்காப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தற்காப்புப் படை வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

## கில்மிஷாவை நேரில் சென்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன் இசையால் உலகத் தமிழர்களின் உள்ளம் கவர்ந்த இளம் பாடகியாக உருப்பெற்று, ஈழத் தமிழர்களின் அடையாளமாக இந்தியத் தொலைக்காட்சியின் சரிகமப இசை நிகழ்வில் வெற்றியாளராக முடிசூடி, நேற்று நாடு திரும்பிய கில்மிஷாவை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இன்று நேரில் சென்று வாழ்த்தினார்.

யாழ்ப்பாணம், அரியாலையில் உள்ள கில்மிஷாவின் வீட்டில் நடந்த இந்த நிகழ்வில், கில்மிஷாவின் குடும்பத்தினரும் உடனிருந்தனர். (O1)

## இலங்கைத் தமிழருக்காக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயகாந்த், தமிழ்நாட்டு திரை வானிலும், பின் அரசியல் வானிலும் சூறாவளியாக எழுந்தார். இடையில் திடீரென அமைதி தென்றலானார்.

புரட்சி கலைஞர் என்ற தமிழ் நடிகர், தே.தி.மு.க. தலைவர் என்ற எழுச்சி அரசியல்வாதி என்ற பிரபல அடையாளங்களை மீறி சிறந்த மனிதர் என ஒட்டு மொத்த தமிழுலகில் அவர் அறியப்பட்டார்.

கடல் கடந்து இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில், எம்மை நேசித்த, எமக்காகத் தமிழ் திரையுலகை அணி திரட்டிய, மதுரை மண்ணுக்கே உரிய வீரத்தமிழனாய் எமக்காகக் குரல் எழுப்பிய தாய்த் தமிழகத் தொப்புள் கொடியான் என உணரப்பட்டவர் விஜயகாந்த்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக, ஒட்டுமொத்த இலங்கை வாழ் தமிழர்களின் அஞ்சலிகளை அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவரது குடும்பத்தாருக்கும், அவரது தே.தி.மு.க. கட்சியினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (அ)

## தொற்று நோய்கள் பற்றிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், தற்போது பரவி வரும் வைரஸ் நோயானது கொரோனாவா அல்லது இன்புளுயுவன்சாவா? என்பது குறித்து அரசாங்கம் தெளிவான அறிக்கையை வழங்க வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று பரவல் தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து எதுவாக இருந்தாலும், மக்கள் தமது பாதுகாப்பு குறித்து மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## கம்பஹா மாவட்டத்தில் கொவிட் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டவரின் மூத்த சகோதரிக்கும் அன்டிஜென்ட் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும், அவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக வீரகுல பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரண்டாவது நபர் தற்போது கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இறந்த பெண்ணின் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்த பின்னர், சடலத்தை வீட்டிற்கு கொண்டு செல்லாமல் கஸகஹவத்த மயானத்தில் தகனம் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ரெதி-37)

## விபத்தை ஏற்படுத்திய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கொடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றச் சென்ற வேளையில் மாரவில மொதரவெல்ல தேவாலயத்துக்கு முன்பாக வங்குவ பிரதேசத்தில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சரின் சொகுசு வாகனம் மற்றைய காரைச் சேதப்படுத்தியுள்ளது என்றும், அதில் பயணித்த கோடீஸ்வர தொழில் அதிபர் தனது வாகனத்துக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்த்து கடும் ஆத்திரமடைந்து இரும்புக் கம்பியால் இராஜாங்க அமைச்சரின் வாகனத்தைத் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மாரவில பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# கிழக்கின் கேடயத்தின் - அயலவர்களுக்கு உதவுவோம்! 800 குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன



(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கனமழை காரணமாக பல குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவும் வகையில் அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த 800 குடும்பங்களுக்கு "அயலவர்களுக்கு உதவுவோம் இரண்டாம் கட்டம்" திட்டத்தின் கீழ் அரிசி பொதிகள் கிழக்கின் கேடயத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மூலம் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் அவர்களின் சொந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள், தொழில் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு இந்த பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த கொரோனா தொற்று காலத்திலும் ஜனாஸா நல்லடக்கம், நிவாரணப்பணி, என பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்த கிழக்கின் கேடயம் அமைப்பு அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 1000 குடும்பங்களுக்கான உலருணவு பொதிகளை கொரோனா தொற்று காலத்திலும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிழக்கின் கேடயத்தின் தன்னார்வ தொண்டர்கள் அரிசிப் பொதிகளை கொட்டும் மழையில் அடையாளம் காணப்பட்டவர்களிடம் பகிர்ந்தளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் பிரதேச மட்ட மகளிர் மகாசங்கத்தின் புதிய நிருவாகம்



(நூருல் /ஹுதா உமர்)

கிராம மட்டத்தில் சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் போன்றவற்றை கிராம மட்டத்தில் வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள மகளிர் சங்கங்களை உயிரோட்டமுள்ளதாக செயற்திறன்மிக்க அமைப்புக்களாக புதுப்பிப்பித்து மீளுருவாக்கம் செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அத்தொடரில், இறக்காமம் பிரதேச செயலகத்தினை உள்ளடக்கிய பிரதேச மட்ட மகளிர் மகா சங்கத்திற்கான புதிய நிருவாக சபை தெரிவு மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதில்) எம்.எம்.கே. சாஜிதாவின் ஒருங்கிணைப்பில் இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது நடைபெற்ற புதிய மகளிர் மகா சங்க நிருவாக சபையில் தலைவியாக எஸ். நஜீமியா, செயலாளராக ஏ.கே. ஜாயிஸா, பொருளாராக ஐ. பாஹிமா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஏனைய நிருவாக சபை உறுப்பினர்களும் சபையில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். எதிர்வரும் காலங்களில் பெண்கள் தொடர்பான அனைத்து விடயங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், நல நோன்புத்திட்டங்கள் அனைத்தும் இம் மகளிர் மகா சங்கங்களின் ஊடாகவே நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பி. யஷோதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# மகளிர் சங்கத்துக்கான தளபாடங்கள் பை உற்பத்திப் பொருட்கள் வழங்கல்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் மகளிர் சங்கத்துக்கான தளபாடங்கள் உள்ளிட்ட பை உற்பத்திகளுக்கான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுபடுத்தல் அமைச்சின் மகளிர் பணியகத்தினால் "திரியமம் பெத்த" நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் குறித்த பொருட்களும் தளபாடங்களும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் சக்தி மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு நேற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மகளிர் சங்கத்தின் உற்பத்தி மூலமாக அவர்களின் சுயதொழிலை விருத்தி செய்யும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பை உற்பத்தி திறனை அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# உலகின் கொந்தளிப்பான சூழலுக்கு மத்தியிலும் இந்திய - ரஷ்ய உறவு நிலையான முன்னேற்றம்

## ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவிப்பு



உலகின் தற்போதைய 'கொந்தளிப்பான' சூழலுக்கு மத்தியிலும் இந்திய - ரஷ்ய உறவுகள் நிலையான முன்னேற்றம் அடைந்துள்ளன என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான படையெடுப்பைத் தொடர்ந்து, ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடை விதித்தன. இருந்தபோதிலும், ரஷ்யாவுடனான இந்தியாவின் நல்லுறவு வலுவாக நீடித்து வருகிறது.

ரஷ்யாவின் படையெடுப்புக்கு இந்தியா இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை. அதேநேரம், பேச்சு வார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாக உள்ளது. இதுபோன்ற சூழலில், மேற்கண்ட கருத்தை அந்த நாட்டின் அதிபர் புடின் தெரிவித்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ரஷ்யாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அதிபர் புடினை மொஸ்கோவில் உள்ள அவரது மாளிகையில் கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

அது குறித்து ரஷ்ய அதிபரின் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'உலகின் தற்போதைய 'கொந்தளிப்பான' சூழலுக்கு மத்தியிலும் ஆசியாவில் உள்ள பாரம்பரிய நட்பு நாடுகளுடன் குறிப்பாக இந்தியாவுடனும் இந்திய மக்களுடனும் பரஸ்பர உறவுகள் நிலையான முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது என இந்திய அமைச்சர் ஜெய்சங்கரிடம் அதிபர் விளாதிமீர் புதின் தெரிவித்தார்.

'உக்ரைன் நிலவரம் தொடர்பாக நானும் பிரதமர் மோடியும் பலமுறை பேசியுள்ளோம். சிக்கலான நடைமுறைகளில் அவரது அணுகுமுறை மற்றும் நிலைப்பாட்டை நாங்கள் அறிவோம்.

போர் நிலைமை குறித்து பிரதமர் மோடியிடம் தொடர்ந்து தகவல்களைப் பகிர்ந்துள்ளேன். பிரச்சினைக்கு அமைதியானவழியில் தீர்வுகாண்பதற்குரிய அனைத்து விஷயங்களையும் செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பத்தை நானறிவேன். இது தொடர்பாக மேலும் பேசுவோம். இப்போதைய சூழல் குறித்த கூடுதல் தகவல்களை இந்தியாவுக்கு அளிப்போம்.

எங்களின் 'நண்பரான' இந்தியப் பிரதமர் மோடி ரஷ்யாவுக்கு வர வேண்டுமென விரும்புகிறேன். இதன் வாயிலாக தற்போதைய விவகாரங்கள் மற்றும் ரஷ்ய-இந்திய உறவுகளை மேலும் மேம்படுத்தும் வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்க வாய்ப்பு ஏற்படும். எனது அழைப்பை பிரதமர் மோடியிடம் தெரிவியுங்கள். அவரை ரஷ்யாவில் காண ஆவலோடு இருக்கிறேன்.

இருதரப்பு வர்த்தக உறவுகள் கடந்த ஆண்டை விட இந்தாண்டு வளர்ச்சி கண்டுள்ளன. கச்சா எண்ணெய், நிலக்கரி போன்ற எரிபொருள் வளங்கள் மட்டுமன்றி உயர் தொழில்நுட்ப துறையிலும் இருநாடுகளும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன' என்று புடின் கூறினார் என்று குறிப்பிட்டப்பட்டிருந்தது.


இந்தியாவில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், எந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் இருதரப்பு பாரம்பரிய நட்புறவு பேணப்படுமென நம்புவதாகவும் புடின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவிலும் அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது, அதிபர் இந்தியப் பிரதமர் மோடியின் வாழ்த்துகள் மற்றும் கடிதத்தை அவரிடம் அமைச்சர் ஜெய்சங்கர் அளித்தார். அக்கடிதத்தில், இந்திய - ரஷ்ய ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகளில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இந்தியப் பிரதமர் மோடி தனது கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பு 50 பில்லியன் டொலர்களை எட்டியிருப்பதாக ரஷ்ய அதிபர் புடினிடம் இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்ததாகவும் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்த போதிலும், அந்நாட்டிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது கணிசமாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (04)

# அமெரிக்க டெக்ஸாஸ் மாகாணத்தில் விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 இந்தியர்கள் பலி!



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் மகிழுந்து மீது பாரவூர்தியொன்று நேருக்கு நேர் மோதியதில் இரு குழந்தைகள் உள்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 இந்தியர்கள் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள ஜான்சன் கவுண்டி பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க தேசிய நெடுஞ்சாலையில் தவறான பாதையில் நுழைந்த பாரவூர்தி மீது மகிழுந்து மோதியது.

மகிழுந்தில் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் பயணித்தனர். அவர்களில் லோகேஷ் பொட்டாபத்துல்லா (43) என்பவர் மட்டுமே பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

விபத்தில் பொட்டாபத்துல்லாவின் மனைவி நவீனா (36), அவர்களின் குழந்தைகள் நிஷிதா(9), கிரித்திக் (10), நவீனாவின் பெற்றோர்கள் சீதாமகாலெட்சுமி (60), நாகேஷ்வர ராவ் (64), ஓட்டுநர் ருஷில் பர்ரி (28) ஆகிய 6 பேர் உயரிழந்துள்ளனர்.

மகள் மற்றும் பேரன் பேத்திகளைக் காண நவீனாவின் பெற்றோர் டெக்ஸாஸ் மாகாணத்துக்கு வந்தபோது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் உயரிழந்த அனைவரும் ஆந்திராவின் மும்முடிவரம் தொகுதி எம்எல்ஏ வெங்கட சதீஷ் குமாரின் உறவினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான பாரவூர்தியில் பயணித்த 17 வயதுடைய இரு சிறுவர்கள் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (04)

# இங்கிலாந்தில் பலத்த காற்றுடன் பனிப்பொழிவு வீடுகள் பல சேதம் - விமா சேவைகளும் பாதிப்பு



வடக்கு இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்தின் சில பகுதிகளில் பலத்த காற்று மற்றும் கடும் பனிப்பொழிவுடன் புயல் தாக்கி வருகிறது. இதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ரயில்கள் மற்றும் விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அசோசியேட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மணிக்கு 80 மைல் வேகத்தில் காற்று வீசுவதாகவும் வீடுகளுக்கு தடைப்பட்ட மின்சார இணைப்புகளை மீண்டும் கொடுக்க முயற்சித்து வருவதாகவும் உள்ளூர் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

14,000 த்துக்கும் அதிகமான வீடுகள் மற்றும் அலுவலகங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தில் ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. மரமொன்று விழுந்து ரயிலின் சாரதிப் பகுதியைத் தகர்த்துள்ளது. ஆயினும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

சாலைகளில் பனி மூட்டம் இருப்பதாகவும் சிறியளவிலான சூறாவளி வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். இரவு நூற்றுக்கும் அதிகமான வீடுகளில் இருந்து பாதுகாப்புக் கருதி மக்கள் அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர். இங்கிலாந்தின் முதன்மையான ஹீத்ரூ விமான நிலையம், வானிலை சீரற்ற நிலை காரணமாக 18 விமான சேவைகளை ரத்துச் செய்துள்ளமை கவனிக்கத்தக்கது. (04)



# பாகிஸ்தானில் புத்தாண்டுக்கான கொண்டாட்டங்களுக்குத் தடை!

வரவுள்ள புத்தாண்டுக்கான கொண்டாட்டங்களை பாகிஸ்தான் அரசு முற்றிலும் தடைசெய்வதாக, அந்த நாட்டின் பொறுப்பு பிரதமர் அன்வருல் ஹக் கக்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய கக்கர், 'போரில் நமது சகோதர சகோதரிகள் தொடர்ந்து உயிரிழக்கும் இந்த நேரத்தில், அவர்களுக்கு நம் ஆதரவைத் தெரிவிக்கும் வகையில், புத்தாண்டு கொண்டாட்டங்களைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது' எனத் தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேல் வன்முறையில் எல்லை மீறி செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதுவரை 9,000 குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் மட்டுமல்லாமல், மொத்த இஸ்லாமிய உலகமும், குழந்தைகள் படுகொலை செய்யப்படுவ தையும், ஆயுதமேந்தாத பாலஸ்தீன மக்களை இனப் படுகொலை செய்வதையும் கண்டு சகிக்க முடியாத வேதனையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இதுவரை இரண்டுமுறை மனிதநேய உதவிகளை காஸாவிற்கு அனுப்பியுள்ளது. மூன்றாவது முறை உதவிகளை அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (04)

# அறநெறிப் பாடசாலை வினைத்திறனை அதிகரித்தல் தரம், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்



(நூருல் ஹுதா உமர்)

கடந்த 7 ஆம் திகதி நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அஹதியா பாடசாலைகள், குர்ஆன் மத்ரசாக்கள் , அரபுக் கல்லூரிகள் மற்றும் மேலதிக கல்வி நிறுவனங்களில் சிறுவர்களின உச்சநலன் பேணப்படுவது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் அவர்களின் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர், நிந்தவூர் பிரதேச சபை செயலாளர், உலமாக்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர், உலமா சபை செயலாளர், மதரஸாக்கள் மற்றும் அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், நிர்வாகிகள், தனியார் கல்வி நிறுவனங்களின் முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், அகில இலங்கை அகதியா பாடசாலைகள் சம்மேளனத்தின் உதவி தலைவர், கலாசார உத்தியோகத்தர் ஆகியோர்கள், சிறுவர் பெண்கள் பிரிவை சேர்ந்த உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது பதிவு செய்யப்படாத அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் முழு நேர, பகுதி நேர மதரசாக்கள் அரபுக் கல்லூரிகள் என்பன 15 .01. 2024 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு முன்னர் எவ்விதமான மேலதிக வகுப்புக்களும் நடைபெற தடைவிதிக்கப்படுகின்றது என்றும் வெள்ளிக்கிழமைகளில் மேலதிக வகுப்புகளை நடத்துவதாயின் அஸர் தொழுகைக்கு பிற்பாடே நேரசுசிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பெற்றோருடைய அவதானிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் இயங்குகின்ற மேலதிக வகுப்புகள் தவிர ஏனைய மேலதிக வகுப்புகளை மாலை 6 மணிக்கு முன்னர் முடிவுறுத்த வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் தனியார் கல்வி நிறுவனங்களினதும் முழு நேர அரபுக் கல்லூரிகள், பகுதி நேர அல்குர்ஆன் மதரஸாக்கள், ஏனைய குர்ஆன் மதரஸாக்களின் உணவு, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள், மாணவர்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்வதுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அவதானிக்கப்படும் என்றும் அகதியா பாடசாலைகள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இயங்குகின்றனவா என்பதை உறுதி செய்வதுடன் இந்த ஊரில் இயங்குகின்ற 7 அகதியா பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகளில் எதிர்காலத்தில் அதனை ஆரம்பிப்பதற்கும் பதிவுசெய்வதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த தீர்மானங்களின் வெற்றி தோல்வி பெற்றோரினது கைகளிலும் தங்கியிருப்பதனால் இது குறித்து பள்ளிவாசல்கள் மற்றும் பாடசாலைகளினூடாக பெற்றோருக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கழிவுப் பொருட்களிலிருந்து மோட்டார் சைக்கிள் தயாரித்த குருவிட்ட வித்தியாலய மாணவர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

குருவிட்ட, பரகடுவ பிரதேசத்தைச் சேர்ந்த குருவிட்ட மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரணதர வகுப்பில் கல்வி பயிலும் எஸ்.ஆர்.துலாஞ்சன் என்ற மாணவர், பழைய இரும்பு மற்றும் கழித்தொதுக்கப்பட்ட உதிரிப் பாகங்கள் என்பவற்றை பயன்படுத்தி இரண்டு பேர் பயணிக்கக்கூடிய மோட்டார் சைக்கிள் ஒன்றை தயாரித்துள்ளார்.

பாடசாலை அதிபர் சசீக்கா குலரெட்ண, ஆசிரியர்கள், சக வகுப்புத் தோழர்கள் மற்றும் தனது பெற்றோர்கள் முன்னிலையில் தான் தயாரித்த மோட்டார் சைக்கிளை அவர் செலுத்தி காண்பித்துள்ளார்.

இதனைத் தயாரிப்பதற்கு தனக்கு மூன்றுமாத காலம் தேவைப்பட்டதாகவும், தனது அடுத்த இலக்கு மோட்டார் கார் ஒன்றைத் தயாரிப்பதாகும் எனவும் துலாஞ்சன் தெரிவித்துள்ளார்.





# மூதூர் பிரதேச கலாசார விழா





(எம்.ஏ.ஏ.அக்தார்)

மூதூர் பிரதேச கலாசார விழா பிரதேச செயலாளர் எம்.பீ. எம். முபாறக் தலைமையில் தோப்பூர் உப பிரதேச செயலக பிரிவில் மூதூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் சமிந்த கெட்டியாராச்சி கலந்து சிறப்பித்தார். நீர்ப் பாசன அமைச்சின் பணிப்பாளர் கே. எம். எம். மர்சூக், மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி இஷ்ட். எம்.எம். நளீம் , தோப்பூர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் என்.எம். கஸ்ஸாலி , மூதூர் பிரதேச சபை செயலாளர் திருமதி எஸ். சத்தியஜோதி, மூதூர் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே.ஜி.ஜே.யு. சோமநுவர ஆகியோர் கௌரவ அதிதிகளாகப் பங்கேற்றனர்.

மூதூர் உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், கிராம நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், முன்னாள் மூதூர் பிரதேச கலாசார செயலாளர், சர்வ மத தலைவர்கள், கலாசார அதிகார சபை செயலாளர், சிரேஷ்ட கலைஞர்கள், இளம் கலைஞர்கள், தோப்பூர் கலை இலக்கிய பேரவை கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச வாசிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேச கலாசார விழாவில் வெளியிடப்பட்ட முத்து மலர் சஞ்சிகையின் முதற்பிரதி மாவட்ட செயலாளருக்கு மூதூர் பிரதேச செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

மூதூர் பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிக்கொணர்ந்த சிரேஷ்ட கலைஞர்களுக்கும், இளம் கலைஞர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் (திறந்த, பாடசாலை மட்டங்களில்) கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும், நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# திருக்கோவில் இலக்கியப் போட்டிகள் வெற்றியாளர்களுக்கு பரிசளிப்பு விழா

(வி.ரி.சகாதேவராஜா)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகம் நடாத்திய இலக்கிய போட்டிகளில் (திறந்த பிரிவு) வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. நிரோஜினி தவநீதன் அவர்களின் ஒருங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.தங்கையா கஜேந்திரன் அவர்களின் தலைமையில் இன்றைய தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் மற்றும் இலக்கிய போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் கலந்து கொண்டனர்.








## வெள்ளத்தால் மன்னம்பிட்டி பால போக்குவரத்து பாதிப்பு!



(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த சில தினங்களாக பொழிந்து வரும் கனமழையையடுத்து மன்னம் பிட்டி பகுதியில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டோடுகிறது.

இதனால், பிரதான வீதியில் போக்கு வரத்துப் பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

கொழும்பு - ஹகபறணை - மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள மன்னம்பிட்டி பாலமருகேயுள்ள நீண்ட தாம்போதிக்கு மேலால் வெள்ளம் பல அடிகள் செல்கின்றது. இதனால், இரவு வேளையில் எந்த ஒரு வாகனத்தையும் பொலிசார் அனுமதிக்கவில்லை.

பொலிஸார் பகலில் பாரிய வாகனங்களை மட்டும் கண்காணிப்போடு அனுமதித்து வருகிறார்கள். சிறிய வாகனங்கள் முற்றாக அனுமதிக்கப் படவில்லை.

இதனால் மட்டக்களப்பு வரும் வாகனங்கள் மீண்டும் ஹபறனை சென்று திருமலை வாகரை வீதியாக பயணித்து வருகிறார்கள்.

இரவு பயணிக்கும் வாகனங்கள் தரித்து நிற்க வேண்டியநிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஒரு சில நாட்களில் நிலைமை வழமைக்கு திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கல்மடுக்குள புனரமைப்பு பணிகள் நிறைவடைந்தன



கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றான கல்மடுக்குளம், குளக்கட்டுப் பிள்ளையார் வழிபாட்டுடன் நீர்ப்பிசன சேலுமைத்திட்டத்தின் உலக வங்கி நிதிப் பங்களிப்பில் கல்மடுக் குளத்தின் புனரமைப்புப் பணிநிறைவடைந்து, சம்பிரதாய பூர்வமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இக்குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு சுமார் 798 மில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளதகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் மடப்பொங்கல் வழிபாடுகள் நடைபெற்று தண்ணீர் திறந்துவிடப்பட்ட இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியளாலர் கே.கருணாநிதி, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனப் பொறியியளார் மற்றும் இரண்டு கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட 14 அமைப்புகள், விவசாயிகள் எனப் பலரும் இணைந்து இந்நிகழ்வினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

# HappyMarket

Issue 27 December 2023

# BREAKING NEWS

## பிரமாண்டமான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்




## உங்கள் அல்லங்காடி கொண்டாட்டத்தில்

பிரமாண்டமான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுடன் உங்களை சந்திக்க வருகின்றோம்.

**டிசம்பர் மாதம்**

## 30ஆம், 31ஆம்

**திகதிகளில்**




**பி.ப 2:00-8:00 மணி வரை யாழ் கோட்டையில் (பண்ணை சுற்று வட்டம்) நடைபெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

Tourism Northern Province | synamon global | happymarket.lk | தமிழ் 99.5 99.7 | காலைக்கதிர் Kalaikkathir | BirdFather More Social More Business | IDEA FACTORY




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2023இல் வெளியிடப்பெற்றது.